


இப்போது கேளுங்கள்!




பாடம் 7 நவம்பர் 14, 2026














"இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது; உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது." (1 கொரிந்தியர் 10:11)





வேதாகம தீர்க்கதரிசிகள் மிக உயர்ந்த அறநெறிகளை கடைப்பிடித்தனர்: மக்கள் இறைவனிடம் அதிக பக்தி கொள்ள வழிகாட்டினர்: பாவத்திற்கு எதிராக எச்சரித்தனர்: மேலும் ஆறுதலையும் வலிமையையும் வழங்கினர்.

அவர்களுக்கு செவிசாய்த்து, அவர்களின் செய்தியை ஏற்றுக்கொண்டவர்கள் பெரும் பயனடைந்தனர்

இது நடந்தது, உதாரணமாக, ஆசாவுக்கு (2நாளா. 15:1-8); யோசபாத்துக்கு (2நாளா. 20:14-23); மற்றும் அமத்சியாவுக்கு (2நாளா. 25:7-10).

ஆனால் துரதிஷ்டவசமாக, இஸ்ரவேல் மக்களிடையே இது பொதுவான போக்காக இருக்கவில்லை. பெரும்பாலும், தீர்க்கதரிசிகளின் செய்தி நிராகரிக்கப்பட்டது. இன்றும், தேவன் தனது தீர்க்கதரிசிகளின் வாயிலாக தொடர்ந்து பேசுகிறார்.

அவர்களுடைய செய்திக்கு நாம் எப்படி எதிர்வினையாற்றுவது?



தீர்க்கதரிசியை நிராகரித்தல்

செய்தியை நிராகரித்தல்

- அவமதிப்பு
- பிடிவாதம்
- மாய்மாலம்

நடைமுறை பயன்பாடு

தீர்க்கதரிசியை நிராகரித்தல்



"இஸ்ரவேல் புத்திரர் எல்லாரும் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்தார்கள். [...] தேசத்தைச் சுற்றிப்பார்த்தவர்களில் நூனின் குமாரனாகிய யோசுவாவும், எப்புன்னேயின் குமாரனாகிய காலேபும், தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, இஸ்ரவேல் புத்திரரின் சமஸ்த சபையையும் நோக்கி: [...] அப்பொழுது அவர்கள்மேல் கல்லெறியவேண்டும் என்று சபையார் எல்லாரும் சொன்னார்கள்;" (எண்ணாகமம் 14:2-10)



வாக்குறுதி அளிக்கப்பட்ட தேசத்தின் எல்லையில், அந்த தேசத்தைப் பற்றி ஆராய்ந்து வர ஒற்றர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர். அவர்கள் கொண்டு வந்த செய்தியின்படி, அந்த தேசம் தேவன் கூறியபடியே மிகச் சிறந்ததாக இருந்தது (எண்ணாகமம் 13:27). ஆனால் அவர்களுக்கு ஊக்கமளிக்காத செய்தி சேர்க்கப்பட்டது (எண்ணாகமம் 13:28, 31). அதன்பிறகு, அதை கைப்பற்ற அவர்களை ஊக்குவிக்கிறதற்காக, காலேபின் வாயிலாக தேவன் பேசினார் (எண்ணாகமம் 13:30).



ஒரு இரவு தியானத்திற்கு பிறகு, மக்கள் ஒரு முடிவை எடுத்தனர்: தங்களுக்கு வழிகாட்டியாக இருந்த தேவனுடைய தூதர்களை நிராகரிக்க மக்கள் ஒரு முடிவை எடுத்தனர் (எண். 14:1-4). யோசுவாவும் காலேபும் அவர்களுக்கு ஊக்கமளிக்கும் வார்த்தைகளை கூறியபோது, அவர்கள் இவர்களை கல்லெறிய தீர்மானித்தார்கள் (எண். 14:6-10).

அதன் பிறகு, வேறு பல இறைதூதர்களும் நிரகரிக்கப்பட்டனர் (2நாளா. 25:15-16; ஆமோஸ் 7:10-13).



அவர்கள் ஏன் நிராகரிக்கப்பட்டனர்? தேவனிடமிருந்து அவர்கள் கொண்டு வந்த செய்தி, மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப இருக்கவில்லை: மேலும், மக்கள் தங்கள் பாவமான வாழ்க்கை முறையை கைவிடவும் விரும்பவில்லை.



செய்தியை நிராகரித்தல்



அவமதிப்பு

"யெகுதி மூன்று நாலு பத்திகளை வாசித்த பின்பு, ராஜா ஒரு சூரிக்கத்தியினால் அதை அறுத்து, சுருளனைத்தும் கணப்பிலுள்ள அக்கினியிலே வெந்துபோகும்படி, கணப்பிலிருந்த அக்கினியில் எறிந்துபோட்டான்." (எரேமியா 36:23)

யோயாக்கீம் இராஜா வாழ்ந்த காலத்தில், மக்கள் பெரும் பாவங்களில் ஈடுப்பட்டிருந்தனர். இராஜாக்களுக்கும் அவருடைய ஆலோசகர்களுக்கும் எச்சரிக்கை விடுக்கவும், அவர்கள் தங்கள் தீய வழிகளிலிருந்து மனந்திரும்ப செய்யவும், இறைவாக்குகள் அடங்கிய சுருள் ஒன்றை எழுதி வைக்குமாறு எரேமியாவுக்கு தேவன் கட்டளையிட்டார் (எரே. 36:1-3).


ஆனால் யோயாக்கீம் அந்த செய்தியை அலட்சியம் செய்து, அதை தீயில் எரித்து அழித்துவிட்டான்: சிலர் அப்படி செய்ய வேண்டாம் என்று அவனிடம் கெஞ்சியபோதிலும், யோயாக்கீம் அந்த செய்தியை வெறுத்து, அதை நெருப்பில் எரித்து அழித்துவிட்டான் (எரே. 36:21-25).

இதற்கு பதிலாக, யோயாக்கீமுக்கு எதிராக கடுமையான தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது, மேலும் அழிக்கப்பட்ட அந்த செய்தி மீண்டும் எழுதப்பட்டு, விரிவுப்படுத்தப்பட்டது (எரே. 36:27-31).



வேதத்தை வாசிக்காவிட்டால், நாம் விரும்பியபடியெல்லாம் வாழ்ந்து அமைதியாக இருக்கமுடியும் என்று நாம் நினைக்கலாம். ஆனால், தேவனுடைய எச்சரிக்கைகளை புறக்கணித்தால், நம்முடைய பாவம் மற்றும் தீய செயல்களுக்கான விளைவுகளை நாம் அனுபவிக்க வேண்டியிருக்கும்.





பிடிவாதம்

"தேவன்மேல் தன்னை ஆணையிடுவித்துக்கொண்ட நேபுகாத்நேச்சார் என்னும் ராஜாவுக்கு விரோதமாய்க் கலகம்பண்ணி, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரிடத்துக்குத் திரும்பாதபடிக்கு, தன் கழுத்தை அழுத்தமாக்கி, தன் இருதயத்தைக் கடினப்படுத்தினான்." (2 நாளாகமம் 36:13)



யூதாவின் கடைசி மன்னரான, சிதேக்கியா, பாபிலோனுக்கு கட்டுப்பட்டிருப்பதாக ஆணையிட்டிருந்தும், அந்த உடன்படிக்கையை மீறினான். எரேமியா வழியாக தேவன் அவனுக்கு வழங்கிய எச்சரிக்கை செய்திகளை அவன் மீண்டும் மீண்டும் புறகணித்தான் (2 நாளாகமம் 36:12). எருசலேம் பாபிலோனிய படையால் சூழப்பட்டிருந்தபோது, தேவனிடமிருந்து ஒரு செய்தியைப் பெறுவதற்காக சிதேக்கியா எரேமியாவை அழைத்தான் (எரே. 38:14).



செய்தி தெளிவாக இருந்தது: பாபிலோனிடம் சரணடையுங்கள்: அவ்வாறு செய்தால் உங்கள் உயிரையும் எருசலேமையும் காப்பாற்றிக்கொள்ளலாம் (எரே. 38:17-23). ஆனால் சிதேக்கியா அந்த செய்தியை நிராகரித்தான். அவனது பிடிவாதமே எருசலேமின் இறுதியான அழிவுக்கு வழிவகுத்தது (2 நாளா. 36:13).



பதினொரு ஆண்டுகளாக, அவர் மனந்திரும்பி தன் நடத்தையை மாற்றிக்கொண்டால், அவருக்கு நம்பிக்கையூட்டும் செய்திகளை தேவன் வழங்கினார். சில சமயங்களில், அவர் சாதகமாகவே நடந்துகொண்டார், ஆனால் அவர் நிரந்தரமான மாற்றங்களை செய்துகொள்ளவில்லை (எரே. 34:8-11).

மாய்மாலம்

"ஆகையால், நீங்கள் கைக்கொள்ளும்படி அவர்கள் உங்களுக்குச் சொல்லுகிறயாவையும் கைக்கொண்டு செய்யுங்கள்; அவர்கள் செய்கையின்படியோ செய்யாதிருங்கள்; ஏனெனில், அவர்கள் சொல்லுகிறார்கள், சொல்லியும் செய்யாதிருக்கிறார்கள்." (மத்தேயு 23:3)



இயேசு ஏன் பரிசேயர்களை மாய்மாலக்காரர்கள் என்று அழைத்தார்?

ஏனெனில் அவர்கள் ஒன்றை உபதேசித்துவிட்டு, வேறொன்றை செய்தனர் (மத். 23:3)

ஏனெனில் அவர்கள் மற்றவர்கள் மீது கனமான சுமைகளை சுமத்தினார்கள், ஆனால் தாங்களோ அவற்றை சுமக்க வீரும்பவில்லை (மத். 23:4)

ஏனெனில் அவர்கள் செய்த அனைத்தும் மற்றவர்களுக்கு தெரிவதற்காகவே உருவாக்கப்பட்ட ஒரு போலியான வெளித்தோற்றமாக இருந்தன (மத். 23:5)

ஏனெனில் அவர்கள் கௌரவங்களை பெற விரும்பினார்கள், ஆனால் மற்றவர்களை கௌரவிக்கவில்லை (மத். 23:6-7, 11-12)

ஏனெனில் அவர்கள் தீர்க்கதரிசிகளை புகழ்ந்தார்கள், ஆனால் அவர்களுடைய செய்திகளுக்கு கீழ்படிய விரும்பவில்லை (மத். 23:29-31)

ஏனெனில், அவர்கள் தேவனுக்கு சேவை செய்வதாக கூறிக்கொண்டனர்: ஆனால், தேவனின் சார்பாக தங்களிடம் பேசியவர்களை கொல்ல விரும்பினர் (மத். 23:34)

மாய்மால பரிசேயர்களுக்கு எதிராக இயேசு கூறிய வார்த்தைகள், நாம் அவர்களை பின்பற்றுவதை தவிர்க்கவும், தேவன் நமக்கு அருளும் செய்தியை நிராகரிக்க தூண்டும் எந்தவொரு மனப்பாங்கையும் அல்லது எண்ணத்தையும் கைவிடவும் வேண்டும் என்பதற்காக எழுதப்பட்டன.

நடைமுறை பயன்பாடு



"இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது; உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது." (1 கொரிந்தியர் 10:11)



"கடந்த காலத்தை நினைவில் கொள்ள முடியாதவர்கள், அதை மீண்டும் மீண்டும் நிகழ்த்த வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகிறார்கள்" (ஜார்ஜ் சண்டாயனா).

மனித குலத்திற்கு தேவனுடன் ஏற்பட்ட அனுபவங்களை—அவை நல்லவையாக இருந்தாலும் சரி கெட்டவையாக இருந்தாலும் சரி—புறகணிக்கவோ அல்லது முக்கியமற்றவை என்று கருதவோ கூடாது. கடந்த காலம் பெரும்பாலும் எதிர்காலத்திற்கான முன்னுரையாக அமைகிறது. நிகழ்காலத்தில் நடப்பவை மற்றும் எதிர்காலத்தில் நடக்கப்போகும் நிகழ்வுகளுக்கான சூழலை, கடந்த காலமே பெரும்பாலும் அமைத்துக் கொடுக்கிறது வேதாகமத்தின் எச்சரிக்கைகளையும், தீர்க்கதரிசிகள் வாயிலாக தேவன் அனுப்பும் செய்திகளையும் நாம் கவனத்தில் கொண்டால், கடந்த தலைமுறையினர் செய்த தவறுகளை மீண்டும் செய்ய வேண்டிய கட்டயம் நமக்கு ஏற்படாது (1 கொரி. 10:11).




"உங்கள் தேவனாகிய கர்த்தரை நம்புங்கள், அப்பொழுது நிலைப்படுவீர்கள்; அவருடைய தீர்க்கதரிசிகளை நம்புங்கள், அப்பொழுது சித்திபெறுவீர்கள்" (2 நாளாகமம் 20:20)

“எரேமியாவைத் துன்புறுத்தவும் சிறையிலடைக்கவும் காரணமான, கண்டனத்தை எதிர்க்கும் மனப்பான்மை இன்றும் காணப்படுகிறது. பலர் மீண்டும் மீண்டும் விடுக்கப்படும் எச்சரிக்கைகளைக் கவனத்தில்கொள்ள மறுக்கின்றனர்; மாறாக, தங்கள் பெருமையை மெச்சி, தாங்கள் செய்யும் தீமைகளைப் புறக்கணிக்கும் போதகர்களின் பொய்ப் போதனைகளைக் கேட்கவே விரும்புகின்றனர். துன்பகாலம் வரும்போது, அவர்களுக்குப் பாதுகாப்பான புகலிடமோ அல்லது பரலோகத்திலிருந்து எந்த உதவியோ கிடைக்காது. இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊழியர்கள், தங்களுக்கு நேரிடும் அவதூறுகள், புறக்கணிப்புகள் மற்றும் தவறான சித்தரிப்புகள் ஆகியவற்றால் ஏற்படும் சோதனைகளையும் துன்பங்களையும் துணிச்சலோடும் பொறுமையோடும் எதிர்கொள்ள வேண்டும். கடவுள் தங்களுக்கு ஒப்படைத்த பணியை அவர்கள் தொடர்ந்து உண்மையுடன் நிறைவேற்ற வேண்டும்; பண்டைக்கால இறைவாக்கினர்களும், மனிதகுலத்தின் மீட்பரும், அவருடைய அப்போஸ்தலர்களும் கூட இறைவார்த்தைக்காக அவமதிப்புகளையும் துன்புறுத்தல்களையும் சகித்துக்கொண்டனர் என்பதை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும்.”

எலன் ஜி உவைட் (தீர்க்கதரிசிகளும் இராஜாக்களும், `பக். 438)

பின்னிணைப்பு: எலன் ஜி உவைட்டின் தரிசனங்கள்





எலன் ஜி. வைட் பொதுவெளியில் பெற்ற தரிசனங்களின் போது அசாதாரணமான நிகழ்வுகள் இடம்பெற்றன: அவர் சுவாசிப்பதில்லை; அவரது கண்கள் திறந்த நிலையிலேயே இருந்தன; தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதைப் பற்றிய எந்த உணர்வுமின்றி அவர் அசைவுகளை மேற்கொண்டார். ...

சிலர் அவர் தன்னைத்தானே ஒருவித மயக்க நிலைக்கு (மெஸ்மரிசம்) உட்படுத்திக்கொண்டதாகக் குற்றம் சாட்டியபோதிலும், அவர் எப்போது ஒரு தரிசன நிலைக்குள் நுழைவார் என்பதையோ அல்லது எப்போது அதிலிருந்து வெளியே வருவார் என்பதையோ அவரால் தீர்மானிக்க முடியவில்லை.

எலன் தரிசன நிலைக்குச் சென்றபோது, ஜேம்ஸ் ஒயிட் அங்கிருந்தவர்களை அவரைச் சோதித்துப் பார்க்குமாறு அழைத்தார்; இதன் நோக்கம், அவரை எதிர்த்தவர்களுக்கு இருந்திருக்கக்கூடிய அமானுஷ்யத் தோற்றம் குறித்த சந்தேகங்களை நீக்குவதும், அவரை நம்பியவர்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்துவதுமே ஆகும்.

அவர் மீது மெஸ்மரிசம் (வசீகரிக்கும் கலை) செய்ததாகக் குற்றம் சாட்டியவர்கள், அவர் உண்மையில் சுவாசிக்கவில்லை என்பதைக் கண்டு வியப்படைந்தனர்; மேலும், அந்தத் தரிசனம் நிகழ்ந்துகொண்டிருந்த இடத்திலிருந்து அச்சத்துடன் ஓடிவிட்டனர்.